**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# AMO 2020 மாநாட்டில் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம்: பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்காக கூட்டு சேருதல்

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்ட் 17, 2020) – ஆகஸ்ட் மாதம் 17 முதல் 19 ஆம் தேதி வரை நடைபெறவிருக்கும் நகராட்சிகளின் சங்கம் (AMO) நடத்துகின்ற 2020 ஆம் ஆண்டின் மெய்நிகர் மாநாட்டில், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தில் இருந்து ஒரு தூதுக்குழு பங்கேற்கவிருக்கிறது. மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்களால் அணித்தலைமை கொண்ட இதில், நகர்மன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் நகர அதிகாரிகள் ஆகியோர் மாகாணத்தில் பரவலாக இருக்கும் முக்கியமான பங்களிப்பாளர்களுடன் மிகவும் அத்தியாவசியமான தேவைகள் பற்றி பேசுவார்கள்.

நிதி அமைச்சகம், சுகாதார அமைச்சகம், உள்கட்டமைப்பு அமைச்சகம், சுற்றுச்சூழல் மற்றும் பூங்காக்களை பாதுகாத்து பராமரிக்கும் அமைச்சகம் மற்றும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான அமைச்சகம் ஆகிய அமைச்சகங்கள் இந்த மாநாட்டில் பங்குபெறுவதாக உறுதி செய்திருக்கின்றனர்.

நடப்பின் போக்கில் இருக்கின்ற கோவிட் தொற்று பரவலுக்கு எதிர்வினையாற்றுவதன் பேரில், நகரத்தின் பொருளாதார மீட்சிக்கு தேவையான ஆதரவை நாடுவதே இந்த வருடத்திற்கான மிக முக்கியமான முன்னுரிமை கொண்ட விஷயமாக இருக்கும். நகரின் அதிகாரிகள் வேறு கூடுதல் முன்னுரிமை கொண்ட விஷயங்களையும் எடுத்துரைப்பார்கள்; அவ்வாறாகவே, நகரின் நிலைத்து நிற்கவல்ல வளர்ச்சியை மேலாளுகை செய்வது மற்றும் குடியிருப்புவாசிகளின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவது ஆகியவற்றுடன், ஒருங்கிணைந்த அங்கமாக இருப்பவற்றில் அடங்குபவை:

- **உடல் ஆரோக்கியப் பராமரிப்பு –** பீல் மெமோரியல் அமைப்பின் கட்டம் இரண்டு மற்றும் மூன்றாவதாக ஒரு உடலாரோக்கியப் பராமரிப்புக்கான வசதியமைப்பை ஏற்படுத்துவதில் கடப்பாடு கொண்டிருத்தல் .
- **உயரிய வகையிலான போக்குவரத்து வசதி –** இரு வழி-மற்றும்-நாள் முழுக்கவுமான GO சேவை, இலகு ரெயில் போக்குவரத்து, மற்றும் விரைவுப் பேருந்து போக்குவரத்து உள்ளிட்ட புதிய போக்குவரத்து முறைகளில் கூடுதல் முதலீடு செய்தல்.
- **காலநிலை மாற்றம் மற்றும் வெள்ளநீர் கட்டுப்படுத்தல் –** நிதியாதாரம் அளித்தல் மற்றும் சீரான ஒப்புதல் தருதல் ஆகியவற்றின் மூலமாக நகரின் ரிவர்வாக் (Riverwalk) திட்டப்பணிக்கு அதிகரித்த பங்களிப்பு செய்தல், மற்றும் சமுதாய சக்தி மற்றும் உமிழ்தல் குறைப்பு திட்டம் [Community Energy and Emissions Reduction Plan (CEERP) மூலமாக பசுமை பராமரிப்புக்கான உள்கட்டமைப்பு திட்டப்பணிகளில் புதிய முதலீடுகள் செய்தல்.

- **செயல்பாடு மிக்க போக்குவரத்து செய்தல் –** அனைத்து குடியிருப்புவாசிகளுக்கும் பாதுகாப்பு மற்றும் அணுகல்தன்மையை அதிகரிக்கக்கூடிய மேம்படுத்தப்பட்ட கட்டுபடியாகும் வகையிலான இடம் விட்டு இடம் செல்லுதலுக்கான விருப்பத்தெரிவுகள்.
- **இரண்டாம்நிலையைத் தாண்டிய வாய்ப்புக்கள் –** ப்ராம்ப்ட்டன் யூ ( BramptonU ) வை தக்க வைப்பதற்கான சட்ட அமலாக்கம் மூலமாக இரண்டாம் நிலையைத் தாண்டிய அதிகரிக்கப்பட்ட வாய்ப்புக்கள்  அமைய ஆதரவு தருதல்.
- **சொத்துவரி விலக்கு பெற்ற பொது கல்விநிறுவன்ங்கள் சார்ந்த சொத்துக்கள் –** கோவிட் – 19 தொற்று பரவலின் தாக்கத்திற்கு தீர்வு காணும் வகையில் சீரான நிதியளிப்புக்கு வேண்டுகோள் வைத்தல் மற்றும் முழுமையானதும் வெற்றிகரமானதுமான பொருளாதார மீட்சி அடைதல்.
- **புறநகர் சமுதாய கூடுமிடம் –** 20 நிமிடத்தில் நடந்து சென்று அடையக்கூடிய வகையிலான ஆரோக்கியமன ஒரு  கூடுமிடத்தை மாகாண அரசிடமிருந்து  வேண்டுதல்; இது ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற, போக்குவரத்தையே சார்ந்திருக்கின்ற சமுதாயத்தினரை [Transit-Oriented Communities  (TOC) ] போற்றிக்காப்பதற்கான புதிய மாதிரியாக இருக்கும்.

மேலும் தெரிந்து கொள்ள நகரின் வலைத்தளத்திற்கு வருகை தரவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

”கோவிட்-19  தொற்று பரவலின் தாக்கங்களிலிருந்து நமது பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கின்ற தனிப்பயனாக்கப்பட்ட அணுகுமுறையை நோக்கி நாங்கள் பணியாற்றும் அதே சமயத்தில், நமது நகரத்தின் நிலைத்து நிற்கவல்ல, வளர்ச்சியைத் தூண்டுகின்ற, மற்றும் நமது குடியிருப்புவாசிகளுக்கு உயர்வான வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்கின்ற, உள்ளூர் மயமாக்கப்பட்ட தீர்வுகளிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். ப்ராம்ப்ட்டன் நகர் மீது அண்மையில் காட்டிய கடமை உனர்வுகளுக்காக, நான் மாகாண அரசிற்கு நன்றி கூறிக்கொள்கிறேன், பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான பாதையில் முன்னேறும் சமயத்திலேயே இது கட்டியெழுப்பப்படுவதை நான் எதிர்பார்க்கிறேன். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கோவிட்-19 தொற்று பரவலுக்கான நமது எதிர்வினையாற்றலின் சமயத்தில், குடியிருப்புவாசிகள் பெரிதும் நம்பியிருக்கும் அத்தியாவசிய மற்றும் முக்கியமான சேவைகளை நகரம் தொடர்ந்து வழங்கி வந்தது; அதே வேளையில் நமது முழு பொருளாதார மீட்சி மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சியை ஆதரிக்கும் முக்கிய திட்டங்களில் தொடர்ந்து முன்னேறியபடியும் இருந்தது. ப்ராம்ப்ட்டன் நகரின் எதிர்காலத்திற்காக நாம் திட்டமிட்டு கட்டமைக்கும்போது, உயர் மட்ட அரசாங்க அமைப்புகளுடனான நெருக்கமான ஒத்துழைப்பானது, நமது வெற்றிக்கு முக்கிய காரணியாக இருக்கும், மேலும் AMO 2020 இன் போது மாகாணத்துடன் முக்கிய கூட்டு வாய்ப்புகளைப் பற்றி விவாதிப்பதை எதிர்பார்க்கிறேன். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*